தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-2-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பொறியியல் தொழில் நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் செயல்விளக்க விழா

இன்றைய சூழ்நிலையில், மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப பயிர் உற்பத்தியைப் அதிகரிக்கச் செய்வது மிகவும் இண்றியமையாதது. ஆனால், பயிர் சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகின்றது. மேலும், பண்ணை வேலை ஆட்கள் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வது மிகப்பெரிய சவாலாக உள்ளது. தற்பொழுது இருக்கும் சாகுபடி பரப்பில் உற்பத்தியை அதிகரிப்பதற்கு. புதிய தொழில் நுட்பங்களையும், கருவிகளையும் உபயோகப்படுத்துவது மிகவும் அவசியம்.

வேளாண்மையில் உற்பத்தியை பெருக்கி செலவை குறைப்பதில் வேளாண் பொறியியல் கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்கள் இன்றியமையாதவை சாகுபடி முறையில் கருவிகள் பயன்பாட்டுக்கு வரும் பொழுது அதற்கு தகுந்தாற்போல் பயிர் இடைவெளி நடவுமுறை மற்றும் களை எடுக்கும் முறை இவற்றை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. வேகமாக மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப கருவிகள் தெரிவு செய்து உபயோகிக்க, கருவிகளின் செயல்விளக்கம் இன்றியமையாததாகும்.

பல்வேறு பயிர்களுக்கேற்ப தொழில் நுட்பங்களும், கருவிகளும் உருவாக்கப்பட்டிருந்தாலும், அவற்றைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமான வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்ற பல்வேறு திட்டங்களான, வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்கள், வேளாண்மையில் பணிச்சூழல் மற்றும் பாதுகாப்பு, அறுவடை பின்சார் பொறியியல் மற்றும் தொழில் நுட்பம், வேளாண்மையில் ஆற்றல் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள், துல்லிய பண்ணைய வளர்ச்சி மையம் மற்றும்

கூட்டமைப்பு ஆராய்ச்சி தளம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த, செயல் விளக்க விழா வருகின்ற **15.02.2019** அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவில், பல்வேறு திட்டங்களில் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் கருவிகளும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட உள்ளது.

இவ்விழாவில், தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு பல்வேறு கருவிகள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்த செயல் விளக்கங்கள் நடத்த இருக்கின்றனர். விஞ்ஞானிகள் பங்கு பெறும் உழவர் கருத்தரங்கமும் நடைபெற உள்ளது. இந்த செயல் விளக்க விழாவில் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் வேளாண் அறிவியல் நிலையங்கள் வாயிலாக கலந்து கொள்ள உள்ளார்கள்.

மக்கள் தொடர்பு அலுவலர்